


வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்ட
வரலாற்று

# ஆவண மலர்

T 4655

மலர் 1 திருவள்ளுவராண்டு 2021 பிரமோதூத ஆனி ஜூலை 199



ஜலகண்டேஸ்வரர் ஆலயம் - வேலூர்

**புதுமலர் வெளியீடு**
**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்**

---

**வரலாறு கூறும்**
**வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம்**

தமிழக வரலாற்றில் வடஆர்க்காடு பகுதிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. 1989-ஆம் ஆண்டு வடஆர்க்காடு மாவட்டம் வடஆர்க்காடு — அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர் என இரு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க வேலூர்க் கோட்டையில் இயங்கி வந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இன்று புதிய வளாகத்திற்கு மாற்றப்படுகின்றது. இப்புதிய சூழல் மக்களுக்கு இன்னும் சிறப்பாக சேவை புரிய அரசுக்கு கூடுதல் வாய்ப்பு வழங்கியுள்ளது.

கண்டியை ஆண்ட கடைசி தமிழ் மன்னன் விக்கிரமராச சிங்கனின் கல்லறை புதுப்பிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களது முயற்சியால் அங்கு ஓர் அழகிய ''முத்து மண்டபம்'' அமைக்கப்பட்டுள்ளது. பாலாற்றங் கரையில் அம்முத்து மண்டபத்தைச் சுற்றிலும் விரிந்த பூங்காக்கள் அமைந்து, தமிழர் புகழை நிலைபடுத்துவதாக அமைந்துள்ளது. மக்களின் வரலாற்றை விளக்கும் இந்த ஆவண மலர் இவ்வினிய சந்தர்ப்பத்தில் வெளியாவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

உங்கள்,

அ. சத்யமூர்த்தி

மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும்
ஆவணக்குழுத் தலைவர்

# வடஆர்க்காடு-காலச் சுவடு

கி.பி.—

| | | |
|---|---|---|
| 4—9 நூற்றாண்டு | ... | பல்லவர் ஆட்சி |
| 7—13 ,, | ... | சோழர் / பாண்டியர் ஆட்சி |
| 949 | ... | தக்கோலம் போர் |
| 1293 | ... | மாலிக்காபூர் படையெடுப்பு |
| 14-ம் நூற்றாண்டு | ... | சம்புவராயர் ஆட்சி |
| 14 ,, | ... | ஒய்சாளர் ஆட்சி |
| 14—16 ,, | ... | விஜயநகர அரசு |
| 1646—1799 | ... | சுல்தான்கள் ஆட்சி |
| 1678 | ... | மராட்டிய வீரன் சிவாஜி வேலூர்க் கோட்டையைக் கைப்பற்றுதல் |
| 1698 | ... | ஔரங்கசீப்பின் தளபதி செஞ்சியைக் கைப்பற்றுதல் |
| 1712 | ... | ஆர்க்காடு, நவாபுகளின் தலைநகர் ஆயிற்று |
| 1749 | ... | ஆம்பூர் போர் / சந்தாசாகிப் வீழ்ச்சி |
| 1751 | ... | ராபர்ட்கிளைவ் ஆர்க்காடு கோட்டையைக் கைப்பற்றுதல் |
| 1758 | ... | திருப்பத்தூர் போர் |
| 1765 | ... | வேலூர்க் கோட்டை ஆங்கிலேயர் வசமாயிற்று |
| 1780 | ... | ஹைதர்அலி வேலூர் முற்றுகை |
| 1781 | ... | சர்அயர்கூட் ஹைதரை வெல்லுதல் |
| 1801 | ... | வடஆர்க்காடு மாவட்டம் அமைதல் முதல் ஆங்கிலேயக் கலெக்டர் ஸ்ட்ரேட்டன் (STRATTON) |
| 1806 | ... | வேலூர்ப் புரட்சி |
| 1830 | ... | வேலூரில் மத்திய சிறை |
| 1855 | ... | பொன்னை அணைக்கட்டு |
| 1856 | ... | சென்னை-வாலாஜா ரயில் பாதை அமைப்பு |
| 1858 | ... | பாலாறு அணைக்கட்டு |
| 1900 | ... | டாக்டர் ஐடாஸ்கடர் மருத்துவப்பணி தொடக்கம் |
| 1911 | ... | மாவட்டத் தலைநகர் சித்தூரிலிருந்து வேலூருக்கு மாற்றம் |
| 1927 | ... | மகாத்மா காந்தி வருகை |
| 1943 | ... | அறிஞர் அண்ணாவின் சந்திரோதயம் நாடகம் முதல் முதலாக வேலூரில் அரங்கேற்றம் - தலைமை - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் |
| 1953 | ... | வடவெல்லைப் பாதுகாப்பு மாநாடு வேலூர் |
| 1968 | ... | காவலூர் வானாய்வு மையம் |
| 1973 | ... | இராணிப்பேட்டை தொழிற்பேட்டை |
| 1981 | ... | "பெல்" தொழிற்சாலை |
| 1982 | ... | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் |
| 1989 | ... | வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் தோற்றம் |
| 1990 | ... | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் புதிய வளாகத்திற்கு மாற்றம். |

## ஆர்க்காடு வரலாற்றுச் சுருக்கம்

ஆற்றங்கரைகளே புகழ் பெற்ற நாகரீகங்களின் தொட்டில்கள். வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்ட மக்களின் பண்பாடு "பாலாற்றங்கரைப் பண்பாடு" எனலாம். இரும்பு காலத்துப் புதை குழிகளும், தாழிகளும், கல் ஆயுதங்களும் மாவட்டத்தின் தொன்மை பேசும் பொருட்கள். பழைய, புதிய கற்காலப் பழந்தமிழர் வாழ்வை, பையம்பள்ளி அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள் எடுத்துரைக்கின்றன.

கரிகாற்சோழன், காட்டை அழித்து நாடாக்கி மக்களை நாகரீகப் படுத்தினான். கி.பி. நான்காம் நூற்றாண்டு தொடங்கி ஒன்பதாம் நூற்றாண்டு முடிய, பல்லவப் பேரரசின் ஆட்சிப் பரப்பாக அமைந்தது ஆர்க்காடு. வடக்கில் பாதாமிச் சாளுக்கியரும் தெற்கில் பாண்டியரும், ஆர்க்காட்டின்மீது ஆசையுற்றுத்தாக்கி ஆர்க்காட்டைப் போர்க்காடு ஆக்கினர். எட்டாம் நூற்றாண்டு தொடக்கம், சோழர் தம் அரசாண்மைக்கு ஆட்பட்டது ஆர்க்காடு.

13, 14-ம் நூற்றாண்டில் சம்புவராயர் இப் பகுதியை ஆண்டனர். பின் 17-ம் நூற்றாண்டு வரை ஒய்சாளர், விசயநகர ஆட்சி. முகமதியரும், மராத்தியரும், மோதிக் கொண்டது, ஆங்கிலேயர் ஆட்சிக்கு வரவேற்புரைத்தது. இராபர்ட்கிளைவ் ஆர்க்காட்டுக் கோட்டையை 1751-ல் வென்றான். இப்பெருங் கோட்டையே தமிழகத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு வலிவான கால்கோள் ஆயிற்று.

மகேந்திர பல்லவன் (கி. பி. 590 — 629), நந்திவர்மன் (730 — 795), முதலாம் இராசராசன் (985—1016), மூன்றாம் இராசேந்திரன் (1246-1279) இராசகம்பீர சம்புவராயன் (1236—1267), முதலாம் வேங்கடன் (1586—1614) ஆகிய மன்னர்கள் ஆர்க்காட்டுப் பூமியை ஆண்ட நல்லரசர்கள்.

ஒளரங்கசீப்பின் தளபதி 1698-ல் செஞ்சியைக் கைப்பற்றினான். ஆர்க்காடு 'கர்நாடக நவாபி' ஆட்சிப் பகுதியாயிற்று (1712). அந்த 'நவாபி'யே ஆங்கிலக் 'கும்பினி'க்கு 1801-ல் அடைக்கலப்பட்டது. ஆர்க்காடு சுபா, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு எனப் பிரிக்கப்பட்டு வடஆர்க்காட்டிற்கு கர்னல் ஸ்ட்ரேட்டன் ஆட்சித் தலைவர் ஆக்கப்பட்டார்.

அவ்வாறு வடஆர்க்காடு மாவட்ட வரலாறு ஜூலை 31, 1801-ல் தொடங்கியது.

## வடஆர்க்காடு தொல்வரலாறு

வடஆர்க்காடு மாவட்டம் வரலாற்றிற்கு முற்பட்ட சின்னங்களுக்குப் புகழ் பெற்ற இடமாகும். 1863-முதல் லிபானு, புருஸ்புட், கார்ட்டர், இராபின்சன் ஆகியோரின் பெருமுயற்சியால் பல பழங்காலக் கல் ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றுள் லிபானு என்பவரால் சேகரிக்கப்பட்ட அரிய பழைய—கற்காலக் கருவிகள் தற்பொழுது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன. முக்கியமான, பழைய கற்கால பெருங்கற்கால இடங்கள் காவேரிப்பாக்கம், பாலியமங்கலம், அரக்கோணம், சின்னமாபேட்டை நாயக்கன்பாளையம், நகரி, பாலூர், மல்லப்பாடி, அப்புக்கல், அரியூர், கரிக்கல், கரிகந்தாங்கல், மாமண்டூர், அய்ப்பேடு, சென்னநாராயணஹள்ளி முதலிய ஊர்களாகும். இங்கெல்லாம் நடந்த ஆய்வுகள் பெருங்கற் காலத்திற்கும் சங்க காலத்திற்கும் உள்ள பண்பாட்டுத் தொடர்புகளை விளக்குகின்றன.

## தக்கோலப் போர்

கி.பி. 949-ல் முதலாம் பராந்தகனின் மூத்த மகனாகிய இராசாதித்தனுக்கும் இராஷ்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணனுக்கும் தக்கோலம் அருகில் கடும் போர் நடைபெற்றது. இப்போரில் இராசாதித்தன் வீர மரணம் அடைந்தான். "யானைமேல் துஞ்சிய இராசாதித்தன்" என இம்மன்னன் புகழப்படுகிறான். போர் நடந்த இடம் ஊரிலிருந்து கிழக்கே மூன்று கி. மீட்டர் தொலைவிலுள்ள கோட்டைக் கரை மேடு என்ற பகுதி. இப்போரில் உமாபதி ஈசுவரனார் கோயில் மதிற்சுவர்கள் சேதமடைந்துள்ளதை இன்றும் காணலாம்.

## கிளைவ் பஜார் - டெல்லி கேட்.

ஆங்கிலத் தளபதியான இராபர்ட் கிளைவ் தன்னுடைய ஆர்க்காடு வெற்றியினால் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி பரவவும், நிலைபெறவும் வித்திட்டான். இன்று ஆங்கிலேயர்களின் நினைவாக இருப்பது இரண்டே இரண்டு இடங்களாகும். ஒன்று கிளைவ் பஜார். காலப்போக்கில் இது களம் பஜார் என அழைக்கப்படுகிறது.

மற்ற ஒன்று ஆர்க்காடு கோட்டையின் வடபுற வாயிலாக அமைந்த டெல்லி கேட் ஆகும். இதனை கி. பி. 1751-ல் இராபர்ட் கிளைவ் ஆர்க்காட்டில் தான் பெற்ற வெற்றியின் நினைவாகக் கட்டியுள்ளான். பூமியின் மட்டத்தில் இருந்து சுமார் 50 அடி உயரம் உயர்த்தி எதிரிகளின் நடமாட்டத்தினைக் கண்காணிக்க ஏதுவாக இக் கொத்தளம் கட்டப்பட்டுள்ளது. கொத்தளத்தில் கண்காணிப்புப் பணியில் உள்ள காவலர்கள் தங்கவும், கைதிகளை சிறையில் அடைக்கவும் வசதியாக கட்டப்பட்டுள்ளது.

## பழைய அச்சகங்கள்

பழம் நூல்களும் ஆவணங்கள் தான். வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் பௌத்த சமண இந்து கிறித்துவ இஸ்லாமிய சமயங்கள் குறித்து நூற்றுக்கணக்கான நூல்கள் சென்ற நூற்றாண்டில் வெளியாகியுள்ளன. பிரம்ம சமாஜம், பிரம்ம ஞான சபை, புதிய பௌத்தம், இந்திய தேசிய விடுதலை இயக்கம், பகுத்தறிவு இயக்கம் போலும் அமைப்புகளும் வேலூரை மையமாகக் கொண்டு செயல்பட்டு நூல்களை வெளியிட்டன. இந்த மாவட்டத்தின் தொன்மையான அச்சகங்கள் சில இவை:

| | |
|---|---|
| 1871 | தக்கோலம் [விவேக சந்திரோதய அச்சுக்கூடம்] |
| 1876 | வேலூர் [விமலவிலாச அச்சுக்கூடம்] |
| 1886 | வேலூர் [விக்டோரியா அச்சுக்கூடம்] |
| 1887 | வேலூர் [வித்யா ரத்னாகர அச்சுக்கூடம்] |
| 1887 | திருப்பத்தூர் [சின்னைய்ய நாடார் அச்சுக்கூடம்] |

## பொய்கைக் கல்வெட்டு

வேலூர் வட்டம் பொய்கை கிராமத்தில் உள்ள பெருமாள் கோயிலில் திரிபுவனச் சக்கரவர்த்தி மூன்றாம் இராஜராஜதேவர் காலத்திய (கி. பி. 1240) கல்வெட்டு, அக்காலத்தில் விதிக்கப்பட்ட பல்வேறு வரிகளைப்பற்றிக் கூறுகிறது. வரிகள் நெல்லாயம், காசாயம் என இருவகையாக வசூலிக்கப்பட்டன.

நெல்லாயம் ... பாடிகாவல், சில்வரி, எடுத்துக் கொட்டி, அரிமுக்கை.

காசாயம் ... கார்த்திகையரிசி, கார்த்திகைக்காசு, கார்த்திகைப்பச்சை, வேலிப்பயிறு, நீர்நிலக்காசு, தறியிறை, கடையிறை, காலகதப்பாட்டம், தட்டாரப்பாட்டம், ஆசுவக்கடமை, செக்குக் கடமை, ஏரிமீன் காசு, இநவரி, பட்டோலைக்காசு.

## திருமால்பூர் கல்வெட்டு

அரக்கோணம் வட்டம் திருமால்பூரில் உள்ள மணிகண்டேஸ்வரர் ஆலயத்தில் இராஜராஜசோழன் காலத்திய (கி. பி. 985 — 1013) கல்வெட்டு ஒன்று உள்ளது.

'திருமால்பேறு' அக்னீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட காரணத்தால் ஆலயத்திற்கு வர வேண்டிய தானிய வரவு மிகவும் குறைந்து போனது.

இது தொடர்பாக மதுராந்தகன் கண்டராதித்தனால் ஐவர் அடங்கிய நீதி விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது என இக்கல்வெட்டு கூறுகிறது.

## காவேரிப்பாக்கம் வாரியங்கள்

காவேரிப்பாக்கம் வரதராஜபெருமாள் ஆலயத்தின் தெற்குப் புறச்சுவரில் கி. பி. 1460 - ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு அவ்வூரில் மகாசபை ஒன்று இயங்கி வந்ததைக் கூறுகிறது. அதே கோயிலில் காணப்படும் மற்றொரு கல்வெட்டு, அக்காலத்தில் 'தோட்ட வாரியம்' 'ஏரிவாரியம்' 'ஆண்டு வாரியம்' முதலிய கிராம சபைகள் இயங்கி வந்த செய்தியைத் தெரிவிக்கின்றது. இச்சபைகளின் உறுப்பினர்கள் 'வாரியப் பெருமக்கள்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் சம்புவராயர் காலக் கல்வெட்டுகள்.

## வேலூர் வட்டம்

### காங்கேயநல்லூர்

பெருமாள் கோயிலில் வடக்குச் சுவரில் சர்வ லோகச் சக்கரவர்த்தி வென்று மண்கொண்ட சம்புவ ராயரின் 7-ஆம் ஆண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டு உள்ளது. ஒரு காணி நிலத்தைக் காங்கேயநல்லூர் அல்லது நீலகண்ட சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த சபையினருக்குத் திருவேங்கிடம் உடையான் என்பவன் விற்ற செய்தி அறியப்படுகிறது.

கங்கீஸ்வரன் கோயிலில் உள்ள கல்வெட்டில், சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயண சம்புவ ராயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

### விரிஞ்சிபுரம்

விரிஞ்சிபுரம் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில் சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயண சம்புவராயர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குடியாத்தம் வட்டம்

### திருவல்லம்

வில்வாதீஸ்வரன் கோயில் தளிகை அறையில் வடக்குச் சுவரில் விஜயகண்ட கோபாலனின் மூன்றாம் ஆண்டு கல்வெட்டில் 1/16, மற்றும் 1/5 பாக வரி வசூலித்த செய்தி அறியப்படுகிறது. இவ்வரியினை வசூலித்தவர் அழகிய பல்லவர் எதிரிலி சோழ சம்புவராயர்.

மண்டபத்தின் கிழக்குச் சுவரில் — சர்வலோகச் சக்கரவர்த்தி, 'பூமியினையும், செல்வத்தின் தேவதை யையும், வெற்றி கொண்டவன்' எனக் குறிப்பிடப்பட் டுள்ளது. இது இம் மன்னனின் 17-ஆம் ஆட்சியாண் டில் கி.பி. 1339-ல் பொறிக்கப் பெற்ற கல்வெட்டு.

## வாலாஜாப்பேட்டை வட்டம்

### குடிமல்லூர்

பூமீஸ்வரர் கோயிலில் வடக்குச் சுவர், சர்வ லோகச் சக்கரவர்த்தி இராசநாராயண சம்புவராயரின் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, படுவூர் கோட்டத்தில் கலவைப் பற்று என்ற இடத்தில், கரைவழி வள்ளியூரில் உள்ள கடாரம் கொண்ட சோழீஸ்வரம் உடைய நாயனார் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலக் கொடை பற்றிய செய்தியைக் கூறுகிறது.

இதே கோயிலில் தெற்கு, கிழக்குச் சுவர்ப்பகுதியில் இராச நாராயண சம்புவராயர் திருமல்லிநாதரின் 9-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1346) அளிக்கப்பட்ட நில தானம் பற்றி கூறப்பட்டுள்ளது.

சர்வலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணச் சம்புவராயரின் 7-ஆம் ஆண்டில், பயிர் செய்யப்படாத கலவைப் பற்று என்ற இடத்தில் உள்ள நிலங்களுக்கு வரி விலக்கு பணமாகவும், பொருளாகவும் அளிக்கப் பட்டது. இந்நிலங்கள் பயிர்த் தொழிலுக்கு ஏற்றவை அல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாணை திருவல்லம், குடிமல்லூர், கலவை ஆகிய இடங்களில் உள்ள கோயில்களிலும் வெட்டப்பட்டுள்ளது.

## ஆர்க்காடு வட்டம்

### கலவை

திருக்காளீஸ்வரர் கோயில் வடக்குச் சுவர் — கல்வெட்டு இராசநாராயண சம்புவராயரின் 7—ஆம் ஆட்சியாண்டில் பயிர் செய்யப்படாத சில நிலங் களுக்கு அளிக்கப்பட்ட வரி விலக்கு பற்றி கூறுகிறது.

## அரக்கோணம் வட்டம்

### காவேரிப்பாக்கம்

அரக்கோணம் வட்டம் காவேரிப்பாக்கம் வரத ராஜ பெருமாள் கோயிலின் தெற்குச் சுவரில் கி.பி. 1374-ம் ஆண்டில் செதுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு மல்லிநாதன் சம்புவராயன் வழங்கிய கொடைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டில் காவேரிப்பாக்கம் விக்கிரம சோழ சதுர் வேதி மங்கலம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காவேரிப்பாக்கம் முக்தீஸ்வரர் ஆலயத்தின் தெற்குச் சுவரில் சோழமன்னன் மூன்றாம் குலோத்துங் கன் காலக் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக் கல்வெட் டில் செங்கேணி அம்மையப்பன் வீரமைந்தன் என்கிற அத்திமல்லன் விக்கிரம சோழ சம்புவராயன் பற்றிய குறிப்பு உள்ளது.

— டாக்டர். தாமரைக்கண்ணன்

## வரலாற்று ஆவணம்

எழுத்துருவப் பதிவுகள் ஆவணம் எனப்படும். எழுதப்பட்ட காலம், எழுதிய நபர், அவ்வெழுத்து வெளிச்சப்படுத்தும் துறை, வெளிப்படுத்தும் தகவலின் பரப்பு, மற்றும் விரிவு, அதன் செய்தியின் நிலையான மதிப்பு ஆகிய முக்கியத்துவங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட ஒரு எழுத்துப் பதிவு ஆவணம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

30 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட எழுத்து எதுவும் வரலாற்று ஆவணம் தான் என்கிறது அரசுக் குறிப்பு. எழுத்து வடிவம் பதிக்கப்பெற்ற, எம் மொழியிலும் எழுதப்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் கொண்ட எதுவும் ஆவணம்தான்.

சிறிதோ பெரிதோ ஆவணம் ஒவ்வொன்றும் தம் எல்லையில் உண்மை வரலாற்றை எழுத உதவும்.

## எழுத்துருப் பதிவு

எழுத்தின் வரலாறு ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாய்த் தொடங்குகிறது. சுட்டகளிமண், பேப்பிரஸ்தாள், எலும்பு, விலங்குகளின் தோல், பனை ஒலை, கல், பாறை,உலோகத் தகடு, துணி, காகிதம், மரத்துண்டு இவற்றின் மீதெல்லாம் மனிதன் தன் மனப் பதிவுகளை நிலைப்படுத்த எழுதியும் செதுக்கியும் பதிவுகள் செய்தும் இருக்கிறான். இவை யாவும் ஆவணமே.

வரலாற்று சான்றாகும் வரைபடம், போட்டோ கூட ஆவணங்கள் என்பர்.

## அச்சுப் பதிவுகள்

ஆவணம் என்பது ஆதார மூலப்படைப்புகள். முதன்மை ஏடுகள் அதாவது அசலிகள். இயந்திர வழி பெருக்கப்பட்ட நகல்கள் அல்ல என்றாலும் இன்று அச்சில் இல்லாத அரிய நூல்களின் முதற் பிரதிகள் அச்சு வரலாற்றின் முதற் சாதனைகள். இவை கூட ஆவணங்கள் என்று கொள்வதுண்டு. கி. பி. 1900-க்கு முன்பு அச்சாகிய படைப்பு, மொழிபெயர்ப்பு, சமய நூல் என்று எவ்வகை நூலாயினும் எம்மொழியிலாயினும் அது வரலாற்று ஆவணமே.

## ஆவணக் காப்பகம்

அச்சேறிய வெளியீடுகள் சேமிக்கப்பெறும் இடம் நூலகம். அரும்பொருட்கள் காக்கப்படும் இடம் மியூசியம். இவற்றிலிருந்து வேறுபட்டது ஆவணக் காப்பகம். ஆவணக் காப்பகத்தில் எழுத்துருவ கையெழுத்துப் பதிவுகள் மட்டுமே இடம் பெறும்— ஆவணக் காப்பகம் ஆவணங்களைத் திரட்டுகிறது, ஒழுங்கு படுத்துகிறது, வகைப் படுத்துகிறது, பாது காக்கிறது. வரலாற்றுக்கும் ஆய்வுக்கும் சான்றளிக்க ஆவணங்கள் உதவுகின்றன. சுருங்கச் சொன்னால் காலஞ் சென்றவை என்று கருதப்படும் எழுத்துப் பதிவுகளை மீண்டும் உயிர்ப்பிக்கின்றது. ஆவணக் காப்பகம் அசலான மூலப் பதிவுகளைப் பாதுகாக்கிறது. வாழும் நமக்காக மாத்திரம் அல்ல; இனி வருகிற தலைமுறைகளுக்காகவும் கூட.

## ஆவணங்களினால் உண்டாகும் உடனடிப் பயன்கள்

'இவ்வாறு இருந்தது' 'இவ்விதமாக வாழ்ந்தோம்'என்று நாம் எழுதுகிற, நமது வரலாற்றிற்கு ஆவணங்களே அடிப்படை. ஆவணங்கள், வரலாற்றில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புகின்றன; சிக்கல்களைத் தீர்க்கின்றன—உடைந்து கிடக்கும் வரலாற்றுக் காலக்கோடுகளைப் பிணைக்கின்றன— ஆவணங்களின் அடித்தளத்தில்தான் அரசாங்கம் எதிர்கால திட்டமிடுதலை வரைவு செய்கிறது. ஆவணங்களே நீதிமன்றத்தில் முதன்மையான சாட்சியங்கள். ஆவணங்கள் எல்லை சிக்கல்களைத் தீர்க்கும் நடுவர்கள். நமது உரிமையை நிலைநாட்ட உதவிடும் வீரர்கள்.

## ஆவண ஆய்வுக் குழுவின் தோற்றம்

அரசு ஆவணங்கள் வரலாற்று ஆய்வுக்கு உதவிட வேண்டும் என்னும் நோக்கத்துடன் இந்திய வரலாற்று ஆவண ஆணையம் (INDIAN HISTORICAL RECORDS COMMISSION) 1919-ல் 11 உறுப்பினர்களுடன் தோற்றுவிக்கப்பட்டது. 1924 ல் அதன் உறுப்பினர்கள் 50 பேர் ஆயினர். 1941-ல் ஆவண ஆணையத்திற்கு ஆராய்ச்சி மற்றும் பதிப்புக் குழு அங்கங்கள் கூடின.

1942-ல் மாநிலக் குழுக்கள் அமைத்திட தீர்மானிக்கப்பட்டது. 1944-45ல் கோயில், மடம், ஜமீன் ஆகிவற்றிலிருந்த வரலாற்று ஆவணங்களைப் பகுத்து, பட்டியலிட்டு, பாதுகாக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. 1948—ல் வரலாற்று ஆவணங்களின் தேசியப் பதிவேடு துவக்கப்பட்டது. ஆவண விவரங்கள் பதியப்பட்டன.

முதலாவது மாநில வரலாற்று ஆவணக்குழு டாக்டர் கே. கே. பிள்ளை தலைமையில் சென்னைப் பல்கலைக் கழக வளாகத்திலிருந்து இயங்கிற்று.

## வரலாற்று ஆய்வுகள்

அண்மைக் காலத்தில் ஊர் வரலாறு, பண்பாட்டு ஆய்வுகள் மிகுதியாக நடைபெற்று வருகின்றன. அவை நம் மக்களின் வரலாற்றைப் புதுப்பிக்கவும், நம் வரலாற்றை நாமே எழுதவும் உதவுகின்றன. இவ்வாய்வுகளுக்கு ஆதாரம் ஆவணங்களே. கடந்த சில ஆண்டுகளாக, வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் குறித்து பல்கலைக் கழகங்கள் அங்கீகரித்த ஆய்வுகள் சில—

1. வடஆர்க்காடு வரலாறு (பிஎச்.டி.) — எஸ். தேவகி, 1977
2. வடஆர்க்காடு மாவட்டத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கம் — செல்வராஜ், 1979
3. சுதந்திரப் போராட்டத்தில் வேலூரின் பங்களிப்பு — எல். தியாகராஜன், 1979
4. வேலூர் வட்டத்தில் ஊர்ப் பெயர்கள் — எம். ராமகிருஷ்ணன், 1979
5. வேலூர் நாயக்கர்கள் — கே. திரிபுரசுந்தரி, 1980
6. வடஆர்க்காடு மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள் — மா. கோதண்டராமன், 1984
7. குடியாத்தம் நகரசபை — எஸ். பாபு, 1985
8. வடஆர்க்காடு மாவட்ட மக்கள் இயக்கங்களும் தமிழ் வெளியீடுகளும் (பிஎச்.டி.) — சா. பெருமாள், 1986

## பழைய இதழ்கள்

இதழ்கள், மக்களின் விழிப்புணர்ச்சி, வளர்ச்சி, முன்னேற்றம் முதலானவற்றிற்கு சிறந்த தூண்டுகோலாகும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் மதம் சார்ந்து, பொது அறிவு வளர்ச்சிக்கு, விடுதலை முயற்சிக்கு, தமிழுணர்வுக்கு என பல்வேறு இதழ்கள் வெளியாயின. அவற்றுள் 1947-க்கு முன் வெளிவந்த இதழ்களில் சில இவை :

1887 — ஸ்ரீ லோக ரஞ்சினி, வேலூர்.

1895 — மங்கள வசனம், ஆரணி.

1897 — சித்தாந்த தீபிகை(மறைமலைஅடிகள்) சித்தூர்.

1898 — வேலூர் ஜநாநுகூலநி, வேலூர்.

1908 — விவேகாநந்தம், ஆரணி.

1911 — முகம்மதிய மித்திரன், வாணியம்பாடி.

1916 — ஜனோபகாரி, வேலூர்.

1920 — சத்திய சாட்சி, வாணியம்பாடி.

1922 — சுகோதயம், ஆரணி.

1922 — சோதிட கலாநிதி, வேலூர்.

1922 — ஸநாதந தர்மம், கோட்டைக்குப்பம்.

1923 — ஆயுர்வேதம், வேலூர்.

1924 — இந்திரகுலபோதினி, ஆம்பூர்.

1924 — தீனபந்து, வேலூர்.

1925 — சன்மார்க்க பானு, ராணிப்பேட்டை.

1931 — விவேக சக்தி, ஆரணி.

1932 — ஆயுர்வேத சீவரட்சகம், வேலூர்.

1935 — வீரசுதந்திரம் (ஜமதக்னி) வேலூர்.

1935 — சமதர்மம் (பா. ஜீவானந்தம்) ஜோலார்பேட்டை.

1936 — திருப்புகழமிர்தம் (கிருபானந்தவாரியார்) காங்கேயநல்லூர்.

1941 — அற்புதன், ஆரணி.

1941 — உதயசூரியன், பள்ளிக்கொண்டா.

1942 — தென்நாடு, ஆம்பூர்.

1942 — தமிழ்நிலம் (அண்ணல் தங்கோ) வேலூர்.

1942 — தமிழணங்கு, ஆம்பூர்.

T 4655

# கண்டியை ஆண்ட தமிழ் மன்னன்

"இலங்கையிலுள்ள கண்டியைக் கடைசியாக ஆண்ட தமிழ் மன்னன் விக்ரமராஜ சிங்கா என்ற கண்ணுசாமி வெள்ளையர்களை எதிர்த்துப்போரிட்டு, அவர்களால் கைது செய்யப்பட்டு, தமிழ் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டான். வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டு, தனது 52-வது வயதில் இறந்து போனான்" என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சென்னைக் கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் ஒரு நாள் [28—3—'83] சிறப்பு மிக்கதொரு வரலாற்றுத் தகவலை வெளியிட்டார்கள்.

விக்ரமசிம்மலேந்திர மகாராஜா என்னும் விக்ரமராஜ சிங்கா [1780—1832] மதுரை நாயக்க மன்னரின் வழி முறையினர் ஆவார். அவரது முன்னோர் மதுரை நாயக்கரின் மருமகன் ஸ்ரீ நரேந்திர சிங்கா (1709—1739), ஸ்ரீ விஜய ராஜ சிங்கா (1739-1749), புத்தரின் புனிதப் பல்லுக்கு விழா தொடக்கி வைத்த கீர்த்தி ஸ்ரீ (1747—1780), இராஜாதி ராஜ சிங்கா (1780—1798) ஆகியோர் ஆவர். இந்த ராஜ சிங்கனுக்கு குழந்தைகள் இல்லை. ஆதலால் அவரது தளவாய் பிலாமி, புதுகோட்டை நாச்சர்பட்டி பகுதி பூலம்பட்டியில் வாழ்ந்த, மன்னரது இளைய மைத்துனர் கண்ணுசாமியை அழைத்து வந்து கண்டி மன்னராக்கினான். அவரே விக்ரமராஜ சிங்கா.

கடற்படை வலிமை கொண்ட ஆங்கிலேயர்' இந்தியா மீதான ஆதிக்கத்திற்கு இலங்கை தளமாக அமையும் என்று கருதினர். ஆதலால் இராஜாதி ராஜ சிங்கனின் துணையைப் பெற்று, அவர்கள் திரிகோண மலையைக் கைப்பற்றினர். மேலும் இலங்கை சிற்றரசர்களுக்குள் கலகம் மூட்டவும், இலங்கைப் பகுதிகளில் ஆங்கில நிர்வாக முறையைத் திணிக்கவும் செய்தனர். கட்டபொம்மன், திப்பு போன்ற மாவீரர்களைக் கொன்ற பின்பு, ஆங்கில ஆட்சி 19-ம் நூற்றாண்டின் தொடக்கம் தென்னகத்திலிருந்த தன் கவனத்தை இலங்கை மீது திருப்பிற்று. அதே நேரம், கண்டி ராஜன் ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கன் வெள்ளையர் ஆதிக்கத்தை வெறுத்து, எதிர்த்து அவர்களை அகற்றப் போராடத் தொடங்கினான்,

பதினெட்டு வயதில் அரசரான விக்ரம ராஜ சிங்கா 1798 முதல் 1815 வரை அரசாண்டார். பிரித்தாளும் சூழ்ச்சி மிக்க வெள்ளையர் அவரது அண்ணன் முத்துசாமி தளவாய் பிலாமி ஆகியோரைப் பயன்படுத்தி அவரை வீழ்த்தினர் (1815 மார்ச், 2 ). வழக்கம்போல் தமக்கு உதவியவர்களையும் பின்பு வெள்ளையர் அழித்தனர். விக்ரமராஜனின் வீழ்ச்சியோடு முழு இலங்கையும் ஆங்கிலேயர் கைக்குள் வீழ்ந்தது. மன்னரும் உறவினர் 21 பேரும் தமிழகத்திற்கு நாடு கடத்தப்பட்டனர். இலங்கை கவர்னர், சென்னை மாநில கவர்னருக்கு விக்கிரம ராஜரை பாதுகாப்பில் வைக்கத்தக்க கோட்டையோடு கூடிய இடம் ஒன்றளிக்கக் கேட்டு கடிதம் எழுதினார் (8—4—1815). நீண்ட கடிதத் தொடர்புகளுக்குப் பின் வேலூர்க் கோட்டையே தக்க காவல் அமைப்புடையது என்று தீர்மானிக்கப்பட்டு விக்கிரம ராஜா வேலூரில் வைக்கப்பட்டார் (8—3—1816). சிறை வாழ்க்கையெனினும் சிம்மத் தமிழனாய் வாழ்ந்தார் மன்னர் விக்கிரம ராஜ சிங்கா. அது கண்ட கும்பினி ஆட்சி, மன்னர் மணிமுடி தரிக்கக் கூடாது எனவும் பொன்னிழைத்த கிரீடத்தை உருக்கி வேறு நகைகளாக செய்துகொள்ள வேண்டுமெனவும் ஆணையிட்டது. அவரது அணி மணி தகுதிகள் குறித்தும் கட்டுப்பாடு விதித்தது.

மேலும் வேலூரில் அவரோடு தங்க வைக்கப்பட்ட அவரது உறவினர்களைப் பிரித்து அனுப்பி வைத்தனர். மன்னனுக்குப் பல்லக்கும், சுமக்க பணியாட்களும் வழங்கப்பட்டன (17-3-1817). அப்பல்லக்கு மன்னருக்குரிய சிறப்புகளுடன் இல்லாததால், கர்நாடகப் பல்லக்கு போன்றதொன்றை தமக்கு வழங்குமாறு அவர் வேண்டிக் கொண்டார். 17ஆண்டுகள் ஆட்சி நடத்திய விக்ரம ராஜா 17ஆண்டுகள் வேலூர் கோட்டைச் சிறையில் நலிந்து 1832-ல் மரணம் அடைந்தார்.

விக்ரம ராஜாவின் கல்லறை, வேலூர் — சித்தூர் சாலையில் பாலாற்றின் தென் கரையில் பழைய பாலத்திற்கு மேற்கில் அமைந்துள்ளது. மன்னரது உறவினர் அவரது கல்லறை அமைக்கவும்,

சடங்குகளுக்காகவும் அருகந்தம்பூண்டி, கொணவட்டத்தில் 10 காணி நிலம் பெற்றனர். மன்னரது கல்லறையில் காணும் வாசகம் இது :

"His Majesty Sri Vikramaraja Singha
Last Ex—King of Kandy — Died 1832"

"கண்டி மகாராஜா ஸ்ரீவிக்ரம ராஜசிங்கா
மரணம் — 1832"

அதனருகே அவரது மூன்று பட்டத்தரசிகள் மற்றும் உறவினரது கல்லறைகள் மொத்தம் ஏழு உள்ளன. இவை யாவும் இலங்கைக் கட்டடக் கலை மரபைச் சார்ந்து அமைக்கப்பட்டவை.

மன்னர் விக்ரமராஜ சிங்காவுக்குப் பின் அவரது உறவினர்கள் பலர், தஞ்சையில் அவர்களுக்கென அமைக்கப்பட்ட கண்டி ராஜா அரண்மனையில் வாழ்ந்தனர். அவ்வாறு, தஞ்சையில் வாழ்ந்த விக்ரம ராஜ சிங்காவின் பேரர் ரங்கராஜா [மறைவு 1944], அவரது மனைவி ராஜலட்சுமி [மறைவு 1944] ஆகியோரது அஸ்திகளும் வேலூருக்கு எடுத்து வரப்பட்டு மன்னர் கல்லறைக்கருகில் புதைக்கப்பட்டன.

அயலவர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய தமிழ் மன்னன் விக்ரம ராஜ சிங்கனது வீரத்தைப் போற்றி நினைவுகூரும் வகையில் அழகியதொரு முத்து மண்டபம் மன்னரது கல்லறையையொட்டி தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டுள்ளது.

— பேராசியர் டாக்டர். சா. பெருமாள்

## சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட நடுகற்கள்

வாணியம்பாடி வட்டம் அம்பலூருக்கு அருகில் தேங்காய் தோப்பூர் என்ற இடத்தில் புலவர் புது. போ. வேங்கடராமன் அவர்களின் உதவியுடன் வேலூர் அரசு அருங்காட்சியகம் மூன்று நடுகற்களைக் கண்டு பிடித்துள்ளது.

- ☐ இராசஇராச சோழன் காலக் கல்வெட்டில் அம்பலூர் 'அம்மலூர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அம்மலூருக்கு மற்றொரு பெயர் விக்ரம சிம்ம சதூர்வேதி மங்கலம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடுகல் தசவயணன் என்ற வீரன் போரில் இறந்து பட்டதற்காக எடுப்பிக்கப்பட்டதாகும்.

- ☐ மோடன் கடாதிராயன் என்பவன் (தெரு ஓட்டுப் பட்ட) பசுக்களை மீட்க நடந்த போரில் இறந்து போனதால் அவனுக்காக எடுக்கப்பட்ட நடுகல் ஆகும். அவ்வீரன் ஒய்சாளர் கால தலைப் பாகையுடன் இடுப்பில் தொங்கும் வாளுடனும் இடது கையில் வில்லுடனும் மார்பிலும் தொடையிலும் பாய்ந்த அம்புகளுடனும் பக்கத்தில் ஒரு பசு நிற்கிறதாகவும் செதுக்கப்பட்டுள்ளது.

- ☐ அம்பலூர் மருத்துவ மனைக்குப் பின்னால் உள்ள தென்னந் தோப்புக்குள் ஒரு நடுகல் உள்ளது. காட்டுப் பன்றியுடன் போரிட்டு இறந்த நாய்க்கு எடுக்கப்பட்ட கல் ஆகும். பன்றியின் தலை நாயின் வாய்க்குள் இருப்பது போல செதுக்கப்பட்டுள்ளது.

— வே. ஜெயராஜ்

## வேலூர்ப் புரட்சி - 1806

வேலூர்க் கலகம் எனப்படும் வேலூர்ப் புரட்சி 'வீழ்ந்து பட்டோம்' நாம் என்றுணர்ந்த தென்னிந்திய மக்கள் விழித்தெழுந்த வீரக் கதையாகும்.

மாவீரன் திப்புவின் வீழ்ச்சிக்குப் பின், அவரது குடும்பத்தினர் கைதிகளாய் வேலூர்க் கோட்டையுள் அடைக்கப்பட்டனர். அவர்களை 1500 இந்திய, 379 வெள்ளைச் சிப்பாய்கள் காவல் புரிந்தனர்.

### *1806*

ஆங்கிலப் படையின் முதல் ரெஜிமெண்டின் முதல் பட்டாலியனின் ஆறு கம்பெனிகளும், நான்காவது ரெஜிமெண்டின் இரண்டாவது பட்டாலியனும் பணியில் இருந்தன. ஏப்ரல், மே மாதம் வாக்கில் சிப்பாய்களுக்குப் புதிய சீருடை அமுலாக்கப்பட்டது. புதிய தலைப்பாகை, தோலால் ஆன குல்லாய்ச் செண்டு, புதிய காலுறைகள் வழங்கப்பட்டு அணியுமாறு வற்புறுத்தப்பட்டது. ஆனால் வேலூர்ச் சிப்பாய்களுக்கு அதனை ஏற்க மனமில்லை.

வாலாஜாபாத்திலும் அப்படியே. தம் ஆணை செயல்படாமற் போனதற்காக அவமானமுற்ற வெள்ளை அதிகாரிகள், சுதேசி சிப்பாய்களை பட்டினி போட்டனர். முன் நின்றவர்களுக்கு தலா 900சவுக்கடி தண்டனை அளித்தனர். ஒரு சிப்பாயின் மாதச் சம்பளம் 7 ரூபாய் மட்டுமே. அதை விட்டெறிந்து விட்டு வேலையிலிருந்து வெளியேற வேண்டும் என ஆபாச அடைமொழியோடு அவர்கள் வெள்ளையரை வைதனர்.

சிப்பாய்களின் மனத்தில் எதிர்ப்புணர்வென்னும் நெருப்பு — திப்புவின் நினைவு எரிநெய் ஆயிற்று.

திப்புவின் புதல்வர்கள், வேலூர்ப் பட்டாளத்தின் சுதேசித் தலைவர்கள், சிப்பாய்களின் எண்ணம் செயலாக ஊக்கம் கொடுத்தனர். மதுரைக் கலவரம் [1804], சித்தூர் கலவரம் [1804-5], மலபார் புரட்சி [1802-5] திருவாங்கூர் புரட்சி [1804-5] முதலானவையும் அவர்களது உணர்ச்சிகளைக் கூடுதலாக்கிற்று.

புரட்சியாளர்கள், வேலூருக்கு அப்பால், நெல்லூர், காளஸ்திரி பகுதிகளோடு ரகசியத்தொடர்பு கொண்டார்கள். இந்து முஸ்லீம் மக்களை, சிப்பாய்களை வெள்ளையர்க்கு எதிராக ஒன்றிணைக்க முயன்றார்கள் — தமக்கெதிராக வதந்தி பரப்புவோர் இராணுவ நடவடிக்கைக்கு உள்ளாவர் என்று மிரட்டியது கும்பினி ஆட்சி.

ஜூலை 4-ம் நாள் புரட்சி தினமாய்க் குறிக்கப்பட்டது. ஆனால் அது 8-ம் தேதி என மாறி மீண்டும் 9-ம் தேதி ஆயிற்று. அன்று மாலையும் இரவும், பல்வேறு காரணங்கள் காட்டி சிப்பாய்களில் பலபேர் கோட்டைக்குள்ளேயே தங்கினர். வெள்ளை அதிகாரிகள் உறங்கிக் கொண்டிருந்தனர். 10-ம் தேதி விடிந்து கொண்டிருந்தது. இரவு இரண்டு மூன்று மணி. சிப்பாய்கள் சிறு பீரங்கிகளை சப்தமேதுமற்று நகர்த்திச் சென்று வெள்ளைக் குடியிருப்புகளுக்கு எதிரே நிலை நிறுத்தினர். சைகை கிடைத்ததும் துப்பாக்கி, பீரங்கிகள் முழங்கின.

கர்னல் பான்கோர்ட் முதல்பலி. அடுத்து கர்னல் மெக்கிராஸ். மெக்கிராஸின் சடலத்தின்மீது சிப்பாய்கள் காறி உமிழ்ந்து, எட்டி உதைத்து இகழ்ந்தனர். அவர்தான் புதுத்தொப்பி அணியக் கட்டாயப் படுத்தியவர். அரண்மனைப் பணியாளர் கேப்டன் வில்லிசனை சுட்டு வீழ்த்தினர். சார்ஜெண்ட் ஜான் ஈலே துரத்திச் சென்று வளைந்த கொடுவாளால் வெட்டப்பட்டார். திப்புவின் இளவரசர்களது பணியாட்கள் புரட்சி நடத்திய சிப்பாய்களுக்கு முழு உற்சாகத்துடன் உதவி செய்தனர். எதற்கோ, கோட்டையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த மேஜர் ஆம்ஸ்ட்ராங் என்ன கலவரம் இது என்றறிய பல்லக்கு விட்டிறங்கினார். கனன்ற குண்டுகளே அவரது கேள்விக்கு பதிலுரைத்தன.

ஐநூறு இந்திய சிப்பாய்கள் ஒன்று திரண்டு வெள்ளைக் குடியிருப்புகளின்மீது குண்டுமழை பொழிந்தனர். 69—ம் ரெஜிமெண்டின் வெள்ளை வீரர் அநேகம் பேர் மாண்டு வீழ்ந்தனர். சார்ஜெண்ட் காஸ்கிரேவ் ஊனப்பட்டு வீழ்ந்தார். ... ...

ஒன்றரை மணி நேரம், தாக்குதல் தீவிரமாக நீடித்தது. பின் இளவரசர் முஸ்-உத்-தீன் ஆணைப் படி கோட்டையில் வெற்றி முழக்கத்தோடு பச்சை வர்ணப் பின்னணியில் கர்ஜித்து நிற்கும் வரிப் புலிக் கொடியொன்று ஏற்றப்பட்டது. அந்த நேரம் கோட்டை முழுவதும் புரட்சியாளர்கள் வசத்தில் இருந்தது.

காலை 9-30 மணி அளவில் வெளியிலிருந்து வெள்ளைப்படை உதவிக்கு வந்தது. மைசூர் இளவரசரும் தான்தான் தலைவர் என்று அறிவித்து முன் வரவில்லை. புரட்சியின் நோக்கத்தை மறந்து போன இந்திய சிப்பாய்கள் கொள்ளையடிப்பதில் தீவிரம் காட்டினர். அதனால் பெருங் குழப்பம் விளைந்தது. காலை 10-மணிஅளவில் வெள்ளையர் கை ஓங்கிற்று. இந்தியச் சிப்பாய்கள் துருவித் துருவித் தேடப்பட்டு கொல்லப்பட்டனர். ஆங்கிலேயர்க்கெதிரான இந்தியாவின் முதலாவது இராணுவக்கிளர்ச்சி இப்படித் தோல்வியுற்றது.

— டாக்டர் பி. சின்னையன் அவர்களது
The Vellore Mutiny — 1806
என்னும் நூலிலிருந்து.

## ஆர்க்காடு தொல்பொருள் வைப்பகம்

ஆர்க்காட்டில் சித்திவிநாயகர் கோயில் தெருவில் தமிழ்நாடு தொல்பொருள் துறையின் தொல்பொருள் வைப்பகம் [Repository] இயங்கி வருகிறது. இங்கு கற்சிற்பங்கள். கல்வெட்டுகள், பழங்கால மட்பாண்டங்கள், நாணயங்கள் முதலியவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த தொல்பொருள் வைப்பகத்தை பொதுமக்கள் பார்வையிடலாம். இங்கு இத்துறையால் வெளியிடப்பட்ட தொல்பொருளியல் புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு.

அருங்காட்சியகம் (Museum) பழங்கால மற்றும் இக்கால அரும் பொருட்கள் மற்றும் கலை, பண்பாடு தொடர்புடைய பொருட்களைச் சேகரித்து, பாதுகாத்து காட்சிக்கு வைக்கிறது. தொல்பொருள் வைப்பகம் தொல்பொருட்களை மட்டும் வைத்துப் பாதுகாக்கிறது.


## வேலூர் அரசு அருங்காட்சியகம்

மாவட்டம் தோறும் மாவட்டத் தலைநகரில் அரசு அருங்காட்சியகம் ஏற்படுத்தி அம்மாவட்டத்தின் அரும் பொருட்களைச் சேகரித்து பாதுகாத்து அவற்றைப் பொதுமக்கள் கண்டு களிக்கவும் கடந்த கால வாழ்வியலை அறிந்து கொள்ளவும் வழி வகுப்பதே அரசின் நோக்காகும். இதன் அடிப்படையில் தொடங்கப்பட்ட மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் இது ஐந்தாவதாகும். வேலூர் நகரின் மையப் பகுதியில் பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள இலட்சுமணசாமி டவுன் ஹாலில் 7-9-1985 முதல் அருங்காட்சியகம் இயங்கி வருகிறது. இது ஒரு பல்நோக்கு அருங்காட்சியகம்.

இங்கு இம்மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களின் ஒளிப்படங்கள், நிழற்படங்கள், கற்சிற்பங்கள், படிமங்கள், இந்திய நாணயங்கள், வரலாற்றுக்கு முற்பட்ட கால கற்கருவிகள், மட்பாத்திரங்கள், இருளர் மலையாளி மற்றும் இலம்பாடிகள் பயன்படுத்தும் கருவிகள், போர் ஆயுதங்கள், தெருக்கூத்து பொருட்கள், இக்கால ஓவியங்கள், இம்மாவட்டத்தில் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்கள், தாவரவியல் விலங்கியல் புவியியல் சம்மந்தப்பட்ட பொருட்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகத்திற்கு முன் பீரங்கிகள், கல்வெட்டுகள் மற்றும் கற்சிற்பங்கள் சிற்ப தோட்டமாக அமைக்கப்பட்டுள்ளன.

பல்லவர், சமணர் கால கற்சிற்பங்களும், சோழர் கால படிமங்களும், வரலாற்றுக்கு முற்பட்ட கற்கருவிகளும். காட்டுநாயக்கன் பல்லக்கும், கல்வெட்டுகளும் சிறப்பானவை. புதர்க்காடு சூழ்நிலைக் காட்சிக் கூண்டாக அமைக்கப்பட்டுள்ளது.

அருங்காட்சியகம் தினமும் காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை வெள்ளி, இரண்டாம் சனி மற்றும் தேசிய விடுமுறை நாட்கள் தவிர அனைத்து நாட்களிலும் இயங்குகிறது. திங்கட் சொற்பொழிவுகள், சிறப்பு சொற்பொழிவுகள் மற்றும் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.



## வேலூர்க் கோட்டை

தென்னிந்தியப் படை அரண்களுள் மிகச்சிறிய ராணுவக் கட்டுமானம் கொண்ட வேலூர்க் கோட்டை விஜய நகரப் பேரரசைச் சார்ந்த சின்னபொம்மி நாயக் கரால் தோற்றுவிக்கப்பட்டது. காலம் 16-ம் நூற்றாண் டின் பிற்பகுதி. இதன் பிரதான மதிற்சுவர் கருங்கல்லா லானது. வட்ட நீள் சதுர வடிவமான கொத்தளங் கள் உண்டு. இதைச் சுற்றி பரந்த அகழியொன்று வடிகால் மூலம் நீரால் நிரப்பப்பட்டது.

17-ஆம் நூற்றாண்டின் நடுவில் பீஜப்பூர் சுல்தான் இக்கோட்டையைக் கைப்பற்றினார். 1675 ஆம் ஆண்டு துக்காஜிராவ் என்பவரின் தலைமையின் கீழ் மராத்தியர்கள் பதினான்கு மாதங்கள் இக் கோட்டையை முற்றுகையிட்டு இறுதியாக — 1676 ஆம் ஆண்டு கைப்பற்றினார்கள். ஆனால் இரண்டு ஆண்டுகள் கழித்து பீஜப்பூர் படை மீண்டும் இக் கோட்டையைக் கைப்பற்றியது. சில ஆண்டுகள் கழித்து இக்கோட்டை மீண்டும் மராத்தியர் வசமாயிற்று.

1708-ல் ஆர்க்காட்டினைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த தாவுத்கான் என்ற கர்நாடக நவாப் இக்கோட்டையைக் கைப்பற்றினார். சுமார் ஒரு நூற்றாண்டு வரையில் நவாபின் கட்டுப்பாட்டில் இக்கோட்டை இருந்தது. இதற்கிடையில் குலாம் முரதசாஅலி கர்நாடக நவாபிற்கெதிராக வேலூரில் கலகம் செய்ய அவருக்கு பிரஞ்சு தளபதி டுப்ளே ஆதரவளித்தார். இருப்பினும் கர்நாடக நவாபின் கூட்டாளிகளான ஆங்கிலேயர்களின் ஆதரவோடு அக்கலகம் முறியடிக்கப்பட்டது. அப்போதிருந்து வேலூர்க் கோட்டை ஆங்கிலேயரின் பாசறையாக மாறியது.

இரண்டாம் மைசூர் யுத்தத்தின்போது ஹைதர் அலி இக்கோட்டையைக் கைப்பற்றினார். ஆனால் ஆங்கிலேயர் அதை மீண்டும் தம் வசமாக்கிக் கொண் டார்கள். நான்காம் மைசூர் யுத்தம் திப்பு சுல்தானின் வீழ்ச்சியுடன் முடிவுற்றபோது, அவரது உறவினர்கள் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். கோட்டை வளாகத்தில் 1806-ல் புரட்சி மூண்டது.

தற்போது கோட்டையினையும் சுற்றுப் புறங் களையும், இந்திய தொல்பொருள் துறை பாதுகாத்து வருகிறது.

### வேண்டுகோள்

வரலாற்று ஆவணம் ஏதேனும் கண்டறிவோர் மாவட்ட ஆட்சித்தலைவர், கோட்டாட்சியர், வட்டாட் சியர் ஆகியோருக்கு தெரியப்படுத்தலாம்.

இச்செய்தி மடலுக்குக் கட்டுரை மற்றும் குறிப்பு களை செய்தி மடல் பதிப்பாளருக்கு அனுப்பலாம்.


பதிப்பாளர்

**திரு. மா. சத்தியமூர்த்தி, இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
தலைவர், மாவட்ட வரலாற்று
ஆவண ஆய்வுக்குழு
வேலூர் - 632 005.

தொகுப்பாசிரியர் குழு
டாக்டர் சா. பெருமாள், வேலூர்.
கவிஞர் சேலம் தமிழ்நாடன்
திரு. வே. ஜெயராஜ், காப்பாட்சியர்.
அரசு அருங்காட்சியகம், வேலூர்.
திரு. கி. தனவேல்,
மாவட்ட வழங்கல் அலுவலர், வேலூர்.

சிந்து ஸ்கிரீன்ஸ், வேலூர். போன் 25459